**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 30.08.2024 வெள்ளிக் கிழமை நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திருமதி.பா. கவிதா,M.Com.,**
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | சாலையோர வியாபாரிகளுக்கான கட்டண விவரங்கள் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்ட வகையில் அதற்கான கட்டண தொகை ரூ.18000/- உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்த துணைப் பணி மேலாளர், அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டையிலிருந்து கேட்பு பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பட்டியல் தொகையினை உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 5023/2014/இ2 | 414 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 2 | இந்நகராட்சிக்கு எதிராக திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் 41/2024 திரு.முருகன்/செங்காண் திருவையாறு என்பவரால் தொடுக்கப்பட்ட வழக்கில் இந்நகராட்சி ஆணையர் சார்பாக வாதிட வழக்கறிஞர் கட்டணமாக ரூ.6000/-ம் செலுத்த கோரி இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.ஜி.தர்மராஜ் அவர்களிடமிருந்து கேட்பு பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 1111 /2020/எச்1</u>** | **415** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |
| 3 | திருத்துறைப்பூண்டி நகராட்சிப் பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் கடைகளிலிருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணியின்கீழ் முதல்நிலை சேகரம் செய்யும் பணிக்கும், சேகரிக்கப்பட்டதை உரிய இடத்தில் ஒப்படைப்பு செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதியின்படி MSG Infra என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு கடந்த 01.05.2023 முதல் மேற்கண்ட நிறுவனம் இந்நகராட்சி பகுதியில் பணி செய்து வந்த நிலையில், 30.04.2024-ல் ஓராண்டு நிறைவு பெறுவதால், பார்வையில் கண்டுள்ள விண்ணப்பத்தில் ஓராண்டு பணி நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர். எனவே, ஒப்பந்ததாரர் கோரிக்கையை ஏற்று நல்லமுறையில் பணி செய்வதால், மேற்கண்ட நிறுவனத்திற்கு ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கவும், மேற்படி பணியின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி முதலாண்டுக்கு ஒரு டன் ஒன்றிக்கு ரூ.5110/- என்ற விகிதத்தில் வழங்கப்பட்டு வந்த நிலையில் ஒப்பந்த எண் 9.1.3சி-ன்படி 10% சதவிகிதம் உயர்த்தி ஒரு டன்னிற்கு ரூ.5621/- என்று நிர்ணயம் செய்து ஆறு மாதக் காலத்திற்கு வழங்கவும், அதற்குரிய உத்தேச செலவினத் தொகை, சேவை வரி நீங்கலாக ரூ.80.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **416** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு :<br>1. தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் இருந்ததால் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணி ஆணை வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2. இதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 2913/2020/எச்1 | | |
| 4 | இந்நகராட்சி பொதுசுகாதார உபயோகத்திலுள்ள குப்பை லாரி த.நா.50எல்–7339– உடைய தகுதி சான்று 16.10.2024–ல் முடிவடைவதால் நடப்பாண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்காக மேற்படி வாகனத்தினை பழுதுநீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.75000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 1810/2024/எச்1 | 417 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| 5 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணையர் உபயோகத்திற்கான ஈப்பு வாகனம் மற்றும் நகர்மன்றத் தலைவர் உபயோகத்திலுள்ள ஸ்கார்பியோ வாகனங்களுக்கு வாகன காப்பீடு செப்டம்பர்–2024ல் முடிவடைவதால் கீழ்க்கண்ட விவரப்படி ஓரியண்டல் இன்சூரன்ஸ் வாகன காப்பீடு நிறுவனத்திற்கு தொகை ரூ.45120/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | 418 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எ.</th><th>வாகனம் எண்</th><th>இன்சூரன்ஸ் முடிவடையும் நாள்</th><th>காப்பீடு தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>த.நா.ஆர்.1074 ஈப்பு</td><td>19.09.2024</td><td>13000/-</td></tr>
<tr><td>2.</td><td>த.நா.50-BV 1666 Scorpio</td><td>18.09.2024</td><td>32120/-</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td></td><td>45120/-</td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. இதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
<u>ந.க.எண் 1809/2024/எச்1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>6</td>
<td>இந்நகராட்சி பணியாளர்கள் ஓ.எம்.226.கூத்தாநல்லூர் திருத்துறைப்பூண்டி மற்றும் மன்னார்குடி நகராட்சிப் பணியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்ற தொகைக்கு பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்தில் ஜூலை-2020 முதல் மார்ச்-2023 வரை பிடித்தம் செய்த தொகை ரூ.23,67,711/-ஐ காசோலையாக சங்கத்திற்கு வழங்கப்பட்டதில், மேற்படி சங்கத்திடமிருந்து 2021-22 முதல் 31.08.2024 வரை வட்டி மற்றும் அபராத வட்டியும் சேர்த்து ரூ.17,92,846/- செலுத்த வேண்டும் என கோரியுள்ளார்கள். மேலும் 2023 ஏப்ரல் மாதம் முதல் இன்றைய மாதம் வரை கூட்டுறவு சங்கத்திடமிருந்து கேட்பு எதுவும் வரப்பெறாததால் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படவில்லை. நகராட்சியின் நிதி நிலைமை மிகவும் பற்றாகுறையான நிலையில் தொடர்ந்து இருப்பதால், மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படும் தொகையினை உடனடியாக உரிய தலைப்பில் செலுத்த இயலாத நிலை ஏற்படுகிறது. மேற்படி வட்டித் தொகையை நிர்வாகம் செலுத்துவதற்கு உரிய வழிவகை இல்லாததாலும் பணியாளர்களின் நலனை</td>
<td>419</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | கருத்தில் கொண்டும், வட்டி மற்றும் அபராத வட்டித் தொகை கூடுதல் ரூ.17,92,846/-ஐ தள்ளுபடி செய்திட கோரி கூட்டுறவு சங்க செயலாளருக்கு வலியுறுத்தி கடிதம் அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சியின் நிதி நிலையை கருத்தில் கொண்டு வட்டித் தொகையினை தள்ளுபடி செய்ய கோரி கூட்டுறவு சங்க செயலாளருக்கு கடிதம் அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண் 2578/2006/பி2</u>** | | |
| **7** | நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.18484/2023/DO1 நாள்.24.07.2024ன்கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2024-25ன்கீழ் வார்டு எண்.5 பழைய பேருந்து நிலையம் அருகில் புதிய வணிக வளாகம் (60 எண்ணிக்கையிலான கடைகள்) கட்டும் பணிக்கு 16.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு | **420** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் குறைவு/ அதிகம் |
|---|---|---|---|
| 1. | M/S. Thanvi Engineering Consortium, No.39, Podhupanithurai Nagar, Near Maharaja Mahal, Pudukottai Road, Thanjavur-5. | 609,00,000 | 0.21% குறைவு |
| 2. | MSG INFRA, Thanjavur | | 1.48% அதிகம் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டை விட 0.21% குறைவானதாகவும் உள்ள M/S. Thanvi Engineering Consortium, No.39, Podhupanithurai Nagar, Near Maharaja Mahal, Pudukottai Road,Thanjavur-5. என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரிசை எண்.1ல் கண்டுள்ள M/S. Thanvi Engineering Consortium, No.39, Podhupanithurai Nagar, Near Maharaja Mahal, Pudukottai Road, Thanjavur-5. என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண். 858/2024/இ1**

| | | | |
|---|---|---|---|
| **8** | திருத்துறைப்பூண்டி நகராட்சி அலுவலக கட்டிடம் மின்பாதையில் கசிவு ஏற்பட்டு | **421** | **அலுவலக குறிப்பு** |

| | | | |
|---|---|---|---|
| | அனைத்து மின் பகிர்மான பாதையிலும் பழுது ஏற்பட்டு அதன் காரணமாக அன்றாட அலுவலக பணிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டது. அச்சமயம் தேர்தல் நன்னடத்தை விதி அமுலில் இருந்ததால் தற்காலிகமாக சரி செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள மின் பகிர்மான பாதை புதுப்பித்து (Wiring) பழுதடைந்த மின் பொருட்கள் அனைத்தையும் மாற்றம் செய்து புதிதாக பொருத்துவதற்கும் நகர்மன்ற கூடத்தில் ஏர்கண்டிஷனர், யுபிவிசி ஜன்னல், மின் வேலை மற்றும் இதர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம்ரூ.990000/-க்குமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**<u>ந.க.எண். 1795/2024/இ1</u>** | | **அனுமதிக்கப் பட்டது** |
| **9** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள வார்டு எண்.3 குட்ஷெட் ரோடு, வார்டு எண்.5 செங்கமலத் தெரு மற்றும் வார்டு எண்.6 வீரன் நகர் பேவர் பிளாக் சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து புதுப்பித்தல் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** | **422** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 1796/2024/இ1** | | |
| **10** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் SBM(U) 2.O UWM திட்டத்தின்கீழ் நடைபெற்ற Bio Mining முறையில் காலம் கடந்து சேகரம் செய்யப்பட்ட 15201m3 குப்பை அகற்றப்பட்டுள்ளது. இவற்றை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க அண்ணா பல்கலைக்கழகம், சென்னை தரைமட்டத்திற்குகீழ் 2.40m சராசரியாக குப்பை உள்ளது இவற்றை அகற்ற Space II மதிப்பீடு கொடுக்க அளவீடு செய்து அறிக்கை அனுப்ப கோரியுள்ளனர். மேற்கண்ட இடத்தில்SBM(U) 2.O UWM திட்டத்தில் 3 MLD STP பணி தொடங்க வேண்டி உள்ளதால் அளவீடு செய்த அளவு உயிரி செயலாக்கம் செய்ய உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குர், சென்னை அவர்களுக்கு அனுப்புவதோடு பணியின் அவசர அவசியம் கருதி 65x60x2.00 உள்ள குப்பை ஒரே இடத்தில் சேகரம் செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 545/2017/இ1** | **423** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| **11** | பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு எதிர்வரும் பருவமழை காலங்களில் திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களில் மழைநீர் தேங்காத வண்ணம் தூர்வாருவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1797/2024/இ1 | **424** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |
| **12** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வேதாரண்யம் சாலையில் அமைந்துள்ள உயிர் அகழாய்வு முறைப்படி மரபு கழிவுகளை அகற்றும் பணி முடிவுற்று மேற்படி இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி துவங்க உள்ள இடத்தில் மேற்படி இடத்தினை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டதில் தரைமட்டத்திற்குகீழ் உள்ள குப்பைகளை ஏற்கெனவே அளவீடு செய்த நிறுவனமான Step Land Survey Consultants, Puducherry என்ற நிறுவனத்தின் மூலம் அளவீடு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 545/2017/இ1 | **425** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 13 | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2024–25ன்கீழ் வார்டு எண்.5 பழைய பேருந்து நிலையம் அருகில் TS No.4 RS NO.163/3ல் புதிய வணிக வளாகம் (42எண்ணிக்கையிலான கடைகள்) கட்டும் பணிக்கும் மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட திருவாரூர் சாலையில் அமைந்துள்ள ASVR நகரில் இந்நகராட்சிக்கு சொந்தமான பூங்கா உள்ள இடத்தின் ஒரு பகுதியில் அறிவுசார் மையம் அமைக்கும் பணிக்கும்அண்ணா பல்கலைக்கழகம், பட்டுக்கோட்டை என்ற நிறுவனத்தின் மூலம் மேற்படி இடங்களில் மண் பரிசோதனை செய்து அறிக்கை பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண். 858/2024/இ1</u> | 426 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| 14 | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2024–25ன்கீழ் வார்டு எண்.5 பழைய பேருந்து நிலையம் அருகில் TS No.4 RS NO.163/3ல் புதிய வணிக வளாகம் (42எண்ணிக்கையிலான கடைகள்) கட்டும் பணிக்கு அண்ணா பல்கலைக்கழகம், பட்டுக்கோட்டைக்கு மண் பரிசோதனைக்கு அனுப்ப மேற்படி இடத்தில் மண் எடுப்பதற்கான போர்வெல் போடுவதற்குஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 427 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 858/2024/இ1 | | |

ஒம்/பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/